உ

கடவுள் துணை

---

தேசாபிமானி

# வ. உ. சிதம்பரம்பிள்ளை யவர்களைப்

பற்றிய பாடற் றிரட்டு.

---

P. வேலாயுதம் பிள்ளை,

1935.

# பொருட் குறிப்பு.


| பொருள். | | பக்கம். | பாக்கள் |
|---|---|---|---|
| முகவுரை | | 3 | |
| அரும்பதவுரை | | 5 | |
| பிழையும் திருத்தமும் | | 8 | |
| மு. ரா. கந்தசுவாமிக் கவிராயரவர்கள் | | 1 | 5 |
| வ. சண்முகம் பிள்ளை யவர்கள் | ,, | 3,32 | 8 |
| இராமசுவாமிக் கவிராயரவர்கள் | ,, | 3,4,10 | 19 |
| கந்தசுவாமி அய்யரவர்கள் | ,, | 4 | 2 |
| சுப்பிரமணியக் கவிராயரவர்கள் | ,, | 5, 12 | 7 |
| ஆறுமுக தேசிகரவர்கள் | ,, | 6 | 1 |
| பெரியதிருவடிக் கவிராயரவர்கள் | ,, | 7 | 2 |
| அருணாசலக் கவிராயரவர்கள் | ,, | 7 | 7 |
| தெய்வநாயகப் புலவரவர்கள் | ,, | 14 | 23 |
| சகஜாநந்த சுவாமியாரவர்கள் | ,, | 23 | 3 |
| சு. முத்துசுவாமிப் பிள்ளையவர்கள் | ,, | 24 | 2 |
| அனந்தபத்மநாப பிள்ளையவர்கள் | ,, | 25 | 1 |
| சிதம்பரவேலுப் பிள்ளையவர்கள் | ,, | 25 | 20 |
| நா. குப்புசாமிப் பிள்ளையவர்கள் | ,, | 31 | 2 |
| த. மு. சொர்ணம் பிள்ளையவர்கள் | ,, | 34 | 3 |
| சதாசிவம் பிள்ளையவர்கள் | ,, | 34 | 2 |
| வைத்தியநாதசுவாமி ஸ்தபதியவர்கள் | ,, | 35 | 14 |
| நெ. வை. செல்லையா அவர்கள் | ,, | 38 | 4 |
| தே. வீரராகவையங்கா ரவர்கள் | ,, | 39 | 6 |

# முகவுரை.

நமது தேசாபிமானியாகிய தூத்துக்குடி வக்கீல் திரு. வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள் பல பொருள்களையும் பல பெரியார்களையும் பற்றிப் பாடியிருக்கிற பாக்கள் எழுதப் பட்டிருந்த புத்தகம் ஒன்றை நான் இவ் வருட ஆரம்பத்தில் பார்க்க நேர்ந்தது. அப் புத்தகத்தில் பிள்ளையவர்கள் பாடிய பாக்கள் மாத்திரமல்லாமல், பிள்ளையவர்களைப் பற்றிப் பல புலவர்கள் பாடிய பாக்களும் எழுதப்பட்டிருந்தன. அவற்றை அச்சிட்டு வெளிப்படுத்தலாகாதா வென்று நான் பிள்ளையவர் களிடம் கேட்டதில், தமது பாக்களிற் பெரும்பாலனவற்றைத் தாம் அச்சிட்டு வெளிப்படுத்தி யிருப்பதாகவும், தம்மைப் பற்றி ஏனைய புலவர்கள் பாடிய பாக்களை அச்சிடவில்லை யென் றும் அவர்கள் சொன்னார்கள்.

பிள்ளையவர்களைப்பற்றிய பாக்களை யெல்லாம் நான் படித்துப் பார்த்தேன். அப் பாக்களெல்லாம் மிக இனிமை யும் அருமையும் வாய்ந்தனவா யிருந்தன. அவற்றைப் பாடி யவர்கள் தமிழ் நாட்டில் மிகப் புகழ்பெற்ற பெரும் புலவர்கள். அப் பாக்கள் எழுதப்பட்டிருந்த மையும் காயிதமும் மிகப் பழையனவாகி, மையின் மங்கலால் எழுத்துக்கள் தெளிவா கத் தெரியாமலும், காயிதம் கைபட்ட அளவில் கிழிந்து போகக்கூடிய நிலைமையிலு மிருந்தன. "இப் பாக்கள் அழிந்து போகாமல் இருக்கும்படியாக இவற்றை அச்சிட்டால் என்ன?" என்று பிள்ளையவர்களை வினவினேன். "என்னைப் பற்றிய பாக்களை யானே அச்சிட்டு வெளிப்படுத்துவது தற் பெருமை பாராட்டலாகாதா?" என்றார்கள். "அவற்றை நான்

அச்சிட்டு வெளிப்படுத்தலாமா? என்றேன். "அவ்வாறு செய்வதில் எனக்கு ஆக்ஷேபம் இல்லை" என்றார்கள். இப்போது நான் அப் பாக்களை அச்சிட்டு இப் புத்தக வடிவமாக வெளியிடுகின்றேன்.

இப் புத்தகத்தில் 19 புலவர்களுடைய 131 பாக்கள் இருக்கின்றன. அவற்றில் விருத்தம் 86; ஆசிரியப்பா 9; வெண்பா 11; தாலாட்டு 12; சிந்து 8; குறும்பா 5. இப் பாக்களுக்குப் பிள்ளையவர்கள் வேண்டுதல்படி மதுரைத் தமிழ்ச் சங்கக் கலாசாலை ஆசிரியர் திரு. சு. நல்லசிவன் பிள்ளையவர்கள் எழுதித் தந்த அரும்பத வுரையும், நடுவெழுத்தலங்காரப் பாக்களின் உரையும், பிழையும் திருத்தமும் இதன்பின் சேர்க்கப்பட்டுள்ளன. அவற்றை எழுதித் தந்த அவ்வாசிரியரவர்களுக்கு என் மனமார்ந்த வந்தனமளிக்கின்றேன். இப் புத்தகத்திலுள்ள பாக்கள் மாணுக்கர்களுக்கும், பிரபுக்களுக்கும், பாவலர்களுக்கும் ஒரு விருந்தாக விளங்குகின்றன.

தூத்துக்குடி
29—9—35.

P. வேலாயுதம் பிள்ளை,
சேதுத் தெரு ஸ்கூல் மானேஜர்.

# அரும்பதவுரை.

| பக்கம் | வரி | பதம் | உரை |
|---|---|---|---|
| 1 | 3 | பல்லாறு | பல வழி |
| ,, | ,, | கேண்மை | சிநேகம் |
| ,, | 4 | பண்பிற்று | தகுதியுடையது (சிறந்தது) |
| ,, | 6 | மருவிப்போந்த | சார்ந்து வந்த |
| ,, | 7 | நள்ளூர் | நடுவூர் (ஊர்நடு) |
| ,, | 11 | முத்தி | வீடு |
| ,, | 13 | அணுத்துணையும் | சிறிதளவும் |
| ,, | 16 | தன்மைத்து | தன்மையுடையது |
| ,, | 19 | தரு | கற்பகதரு |
| ,, | ,, | பஞ்சம் | ஐந்து; வறுமை |
| ,, | 20 | தேனு | காமதேனு |
| ,, | ,, | மடி | பால் மடி; சோம்பல் |
| 2 | 1 | கைப்பதும்மம் | கையாகிய தாமரை |
| ,, | 2 | கனகம் | பொன் |
| ,, | 3 | வேண்டுழி | வேண்டுமிடம் |
| ,, | 5 | செப்பதுவொன்று | சொல்லொன்று |
| ,, | 8 | நிதியிருபான் | ரூபா இருபது |
| ,, | 10-1 | கொள்பாக்கு | கொள்ளும்படி |
| 2 | 12-3 | ஆற்றல் | பொறுத்தல் |
| 3 | 4 | பூரணம் | எங்கும் நிறைந்த சிவம் |
| ,, | ,, | புரித்தெழுந்து | தோன்றியெழுந்து |
| ,, | 5 | போதானந்தம் | ஞானந்தம் |
| ,, | 6 | தேற்ற | தெளிவிக்க |
| ,, | 15 | இதம் | இனிமை |
| ,, | ,, | பரவை | பரவை நாச்சியார் |
| ,, | ,, | வன்றொண்டர் | சுந்தரமூர்த்தி நாயனார் |
| ,, | 21 | இருபொருள் | கல்வி, செல்வம் |
| ,, | 22 | ஒருங்கமைந்து | ஒன்றாகச் சேர்ந்து |
| 4 | 1 | இருவர் | சத்தி, சிவம் |
| ,, | 3 | வருடம் | மழை |
| 6 | 10 | வருவிருந்துதிகவி | வருவிர் + உம் + துதி கவி |
| 6 | 11 | பரிசு | ஈகை |
| ,, | 12-3 | கும்பன் | அகத்திய முனிவன் |
| ,, | 21 | தாம்பு | கயிறு |
| 7 | 17 | ஆசை | பொன், விருப்பம் |
| 8 | 7 | ஆம்பிரபலங்கள் | மாம்பழங்கள், உண்டாகிய கீர்த்திகள் |

| | | |
|---|---|---|
| 8 | 8 | பகருவர்-விற்பர், பேசுவர் |
| ,, | 11 | வனப்பு-அழகு |
| ,, | 21 | ஈகை-கொடை, கொடுக்குங் கை |
| ,, | 25-6 | அற்பகலா-இரவும் பகலுமாக; அன்பு நீங்காமல் |
| 9 | 1 | பொற்பு-அழகு |
| ,, | 5 | கொண்டல்-மேகம் |
| ,, | 10 | வழங்கல்-கொடுத்தல் |
| ,, | 17 | நட்புற்றி-சிநேகங் கொண்டு |
| ,, | 19 | புதுமை-ஆச்சரியம் |
| ,, | ,, | தேற்றம்-தெளிவு |
| 10 | 8 | முன்னீர்-கடல் |
| ,, | 11 | அப்பு-நீர் (கங்கை) |
| ,, | ,, | செஞ்சடிலர்-சிவந்த சடையையுடையவர் |
| ,, | 15 | செப்பலை (செப்பு அலை) - கிண்ணம், கடல் |
| ,, | ,, | மடல் வரைதல்-மடலெழுதுதல் |
| ,, | 17 | அப்பலை-நீரையுடைய கடல் |
| ,, | 21-2 | மாருதி-அனுமான் |
| ,, | 23 | மன்றம்-சபை |
| ,, | 23-4 | கோடான கோடி-பல கோடி (அளவின்மை) |
| ,, | 24 | மனு-மனிதர் |
| 11 | 3-5 | கலங்கலமாவாரிவிட்டான்-அளவில்லாமல் அள்ளிக் கொடுத்தான். கலம்-ஓரளவு கலங்கலம்—அநேகங் கலம். இரண்டு கப்பலை பெரிய கடலிற் செல்லவிட்டான். |
| ,, | 7-8 | ஐந்து-ஐந்து வீடு |
| ,, | ,, | துரியோதனன் பாண்டவர்-குறிப்புப் பொருள் |
| ,, | 9 | மதியானனத்தான்-சந்திரன்போன்ற முகத்தையுடையவன் |
| ,, | 15 | வண்டர்-வண்டுகள் |
| ,, | 16 | கண்ணீர் (கள் நீர்) - தேனுறிய நீர் |
| ,, | 17 | கவடு-கப்பு |
| ,, | 22 | விநயம்-புத்திநுட்பம் |
| ,, | 23 | மனுக்கள்-மனிதர்கள் |
| 12 | 7 | ஊற்றம்-வலிமை; முயற்சி |
| ,, | 12 | ஆற்றுப்பாய்ச்சி-ஆற்றிற் செலுத்தப்படுவது (தோணி) |
| ,, | ,, | கடற்பாய்ச்சி-கடலிற் செலுத்தப்படுவது (கப்பல்) |
| 12 | 12 | நாவாய்-கப்பல் |
| 13 | 21-22 | நாவாயும்-நாக்கும் வாயும் |
| 14 | 3 | கூலம்-கடைவீதி |
| 18 | 15 | அரிக்குருளை-சிங்கக்குட்டி |
| 20 | 4 | கேள்வன்-நாயகன் |
| 21 | 4 | பருதிமைந்தன்-கர்னன் |
| ,, | 5 | மால்-கிருஷ்ணன் |
| ,, | 23 | கோன்-அரசன் |
| 22 | 17 | தனுவேந்து-அர்ச்சுனன் |
| ,, | 18-19 | தேர்மாமன்-கிருஷ்ணன் |
| 24 | 1 | சான்று-சாட்சியாக |
| ,, | 3 | கைம்மாறு-பிரதியுபகாரம் |
| 25 | 13 | மஞ்சு-மேகம் |

| | | |
|---|---|---|
| 26 | 2 | சுதன்-மகன் |
| ,, | 3 | வேய்வனம்-மூங்கில்வனம் (திருநெல்வேலி) |
| ,, | 5 | சினகரம்-கோயில் |
| ,, | 6 | உலப்பு-கெடுதல் |
| ,, | 16 | வள்ளல்-வரையாது கொடுப்பவன் |
| 27 | 19 | ஓர் உதரம்-ஒரு வயிறு |
| 28 | 1 | தரியலர்-பகைவர் |
| ,, | 3 | தென்னளகை-ஒட்டப் பிடாரம் |
| 28 | 4 | பீடு-பெருமை |
| ,, | 6 | உஞற்றினர்-செய்தார் |
| ,, | 11 | கருணைவாரிதி-கிருபைக் கடல் |
| ,, | 12 | விண்மணி-சிந்தாமணி |
| ,, | ,, | சுரபி-காமதேனு |
| ,, | 17 | அந்தரம்-தேவலோகம் |
| 29 | 13 | நற்பரிசு-நல்லதன்மை |
| ,, | 19 | மஞ்சன்-மகன் |
| ,, | 26 | தெறு-வருத்து |
| 30 | 5 | உகுத்தல்-உதிர்த்தல் |
| ,, | 13 | தவிசு-ஆசனம் |
| ,, | 16 | பொய்க்கரி-பொய்ச் சாட்சி |
| ,, | 20 | மாற்றம்-சொல் |
| ,, | 25 | இம்பர்-இவ்விடம், இவ்வுலகம் |
| 31 | 4 | பெருந்திரு-பெருஞ் செல்வம் |
| 33 | 3 | ஓவரும்-ஒழிவில்லாத |
| ,, | ,, | புணர்ப்பு-சேர்க்கை |
| ,, | 7 | கயல்படு கண்ணி-மீன்போன்ற கண்ணை யுடையவள் |
| ,, | ,, | நீத்து-நீக்கி |
| 37 | 8 | என்பது-எலும்பு |
| 38 | 22 | கார்-மேகம் |
| 39 | 2 | மாற்றார்-பகைவர் |
| ,, | 21 | அங்காடிமுன்றில்-கடைவீதி முற்றம் |
| ,, | ,, | அடுக்கல்-மலை |
| 40 | 1 | முந்நகர்-திரிபுரம் |
| ,, | ,, | இக்கு-கரும்பு |
| ,, | ,, | முறுவல்-சிரிப்பு |
| ,, | 10 | வங்கவணிகம்-கப்பல் வர்த்தகம் |
| ,, | 12 | இடுக்கண்-துன்பம் |
| ,, | ,, | கரவு-வஞ்சகம் |
| ,, | 15 | கடிய-நீக்க |

## நடுவெழுத்தலங்காரங்கள்.

| | | |
|---|---|---|
| 5–6 | 1 | வாழ்த்தின் பெயர்-ஆசிடை |
| ,, | 2 | அரம்பையின் பேர்-கதலி |
| ,, | 3 | தாயின் பேர்-அம்மை |
| ,, | 4 | ஆகாயப்பேர்-நபம் |
| ,, | 5 | பரியின் பேர்-புரவி |
| ,, | 6 | இப்பிறப்பின் பேர்-இம்மை |

இப் பெயர்களின் நடு வெழுத்துக்கள் ஆறும் பாட்டுடைத் தலைவர் பெயராதல் காண்க.

| | | |
|---|---|---|
| 7 | 3 | உசிதா |
| ,, | 4 | மதனே |
| ,, | 5 | சிம்மா |
| ,, | 7 | தீபனே |
| ,, | 8 | தீரனே |
| ,, | 9 | கன்ஞு |

## பிழையும் திருத்தமும்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 2 | 4 | வருவேனென்று | வருவேனென்ற |
| 3 | 6 | றிதழ்கின்ற | றிகழுகின்ற |
| 4 | 8 | கனுப்பிற்பணஞ் | கனுப்பிடிற்பொன் |
| 5 | 9 | சட்சிகட்டுச் | சட்சிகட்குச் |
| 7 | 6 | திணங்கிடு | திணங்கியிடு |
| ,, | 10 | புவிதனை | புவிதன்னை |
| 8 | 6 | சனசமூக | சனசமூக |
| ,, | 19 | லாவதெனு | லாவதெனும் |
| ,, | 26 | தேடி | தேடிப் |
| 11 | 22 | வினையம் | விநயம் |
| 12 | 12 | கடற்பச்சி | கடற்பாய்ச்சி |
| 15 | 21 | தப்பதா கக்கூடி | தப்பதாக் கூடியே |
| 16 | 24 | சொல்லு | சொல்லும் பூமியே |
| 18 | 9 | சொல்விற் | சொல்லிடிற் |
| 19 | 2 | சொல்லியவரை | சொல்லியவரைத் |
| ,, | 5 | புண்ணிய | புண்யகோ |
| ,, | 6 | கோளரியே | ளரியே |
| ,, | 16 | கவிக்குதவு | கவிக்குதவ |
| ,, | 25 | மோகனநா | மோக ஞ |
| 23 | 3 | முன்பிதர | முன் பிதா |
| ,, | 8 | பரசாகி | பாசாகி |
| ,, | 14 | யல்லால்வேறு | யல்லாலோர் |
| 26 | 8 | லுதித்திவ் | லுதித்திந்த |
| 29 | 25 | வள்ளலைத் | வேளைத் |
| 30 | 9 | வென்பரென் | வென்பா |
| ,, | 10 | செய்வார் | ரென்செய்வார் |
| ,, | 21 | துளளோர் | துள்ளோர் |
| 35 | 6 | தினபதிப்பு | தினப்பதிப்பு |
| 37 | 17 | திருநற் | திருவுநற் |
| 38 | 3 | கைம்மாறொண்ணு | கைம்மாறெண்ணு |
| 39 | 12 | பேணி | பேணியே |
| ,, | 21 | அங்கடி மூன்றில் | அங்காடிமுன்றில் |

## மதுரைத் தமிழ்ச்சங்க வித்வான்
## திரு.மு.ரா.கந்தசுவாமிக் கவிராயரவர்கள் நிருபம்.

பல்லாற்று வருங்கேண்மை யென்னினுமைத்
துனக்கேண்மை பண்பிற் றென்ன
வல்லார்சொற் றனரெனத் நற்றவத்தா
லக்கேண்மை மருவிப் போந்த
நல்லாய்நள் ளூர்ப்பழுத்த நற்றருவை
நிகர்கரத்தாய் நாளு மென்புன்
சொல்லாலு மனமகிழ்வாய் சிதம்பரவள்
ளாலொன்று சொல்லக் கேண்மோ. (க)

துக்கமிலா திருப்பதுவே முத்திநினைக்
கண்கண்ட சொன்ஞ் வல்லோர்
பக்கமுமத் துக்கமணுத் துணையுமுறக்
கண்டிலமிப் பண்பாற் போலுந்
தக்ககவி வலவர்சிதம் பரங்காண
முத்திதருந் தன்மைத் தென்றூர்
மிக்கவவ்வூர் கண்டுமெமை விடாத்துயர
நினைக்காண விலகிற் றம்மா. (உ)

ஒப்பதுவே றிலைத்தருவும் பஞ்சமுறுந்
தேனுமடி யுறுமென் றேதுன்

கைப்பதுமத் தால்வரைந்த கடிதமொன்றி
லிந்நாள்யான் கனகந் தேடி
வைப்பதுநட் பினர்க்கேயாம் வேண்டுழிவேண்
டுவகொடுத்து வருவே னென்று
செப்பதுவொன் றென்னுளத்துப் புகுந்துமகிழ்
தந்ததிறன் செப்பற் பாற்றோ. (௩)

பாக்கியம்பல் வகையாலுஞ் சிறப்புற்றோய்
நிதியிருபான் பற்றி னேன்பின்
பாக்கியன்புற் றனுப்புவலென் றனைய தரு
ளென்போல்வார் பரிவி னாற்கொள்
பாக்கியம்பு முனந்தருவாய் பிணிமிடிசெய்
துயராற்றல் பார்க்கி னுந்துப்
பாக்கியம்பு படுந்துயரு மாற்றலெளி
தாம்போலும் பகருங் காலே. (௪)

நீயருளும் பொழுதடைவாங் கேட்டலொணா
தெனவுளத்து நினைந்தே னேனுந்
தாயனையா யிதுதிருநாட் சமையமத
னாலெழுதச் சமைந்தே னின்பா
லாயசௌக ரியமறியேன் கூடுமேற்
றருகவின்றே லாம்போ தாக
நேயமுரு வெடுத்தனைய சிதம்பாரஞ்
சிதமதன னிகர்பூ மானே. (௫)

## பாளையங்கோட்டை திரு. வ. சண்முகம் பிள்ளையவர்கள் சி. உலகநாதன் பிறந்ததாகக் கேட்டு எழுதிய நிருபம்.

போற்றவரு பூரணத்திற் புரித்தெழுந்து
புண்ணியத்தின் வடிவாகிப் போதா னந்தந்
தேற்றவரு சிதம்பரத்திற் றிதழ்கின்ற
சிறுமணியைச் சிவமணியாச் செப்ப லன்றி
நேற்றுவரு புதுமணியா நினைப்போமல்லே
நினைக்கவரிற் குறமகளை நிலாவிக் கொண்ட
வாற்றலுயர் குருமணியம் மணியாமென்றே
வறைகின்றோ மறைகின்றோ மறைகின் றோமால்.

---

## சேற்றூர் சமஸ்தான வித்வான் திரு. இராமசுவாமிக் கவிராயரவர்கள் நிருபம்.

(1080-ம் ஆவணி-மீ 19உ)

இதம்பரவை யிடஞ்சொலிவன் றெண்டரையாள்
சங்கரரா மேசர் செம்பொற்
பதம்பரவி யரனடியார் பத்தியும்புத்
தியுந்திகழ்விற் பன்ன மின்னார்
நிதம்பரதந் தனில்மயங்கா மற்கவிஞர்க்
கருள்புரிய நிதியந் தேடுஞ்
சிதம்பரசற் குணபூமா விருபொருளு
மொருங்கமைந்து சிறப்புற் றோனே. (க)

இருவருடம் போருடம்பா யிருக்குமா
னடிபரவி யிரப்போர்க் கெல்லாந்
தருவருடம் போலுதவுஞ் சிதம்பரசம்
பன்னுவென் றனயை நம்ப
ரொருவருட மாகியும்பே சாதிருந்தாற்
பணம்வருமா வுவந்தென் மீதுன்
றிருவருடங் கிப்பிடிவா ரண்டெடிரிக்
கனுப்பிற்பணஞ் சேருந் தானே. (உ)

---

## சி. உலகநாதனைத் தொட்டிலில் இட்டபொழுது தமிழ்ப் பண்டிதர் திரு. கந்தசுவாமி ஐயரவர்கள் பாடியவை.

முத்தே பவளமே முத்திதனைப் பெற்றிடவென்
சித்தந் தெளியவைத்த தேனேநீ கண்வளராய். (க)

மாதா பிதாக்கண் மனக்கவலை மாற்றவந்த
நாதாவென் கண்மணியே நன்குறநீ கண்வளராய். (உ)

---

## மேற்குறித்த சமயம் சேற்றூர் சமஸ்தான வித்வான் திரு. இராமசுவாமிக் கவிராயரவர்கள் சொல்லியவை.

பேருலக நாதபிள்ளை பேரனென வந்துதித்த
சீருலக நாதனெனுஞ் செல்வனே கண்வளராய். (க)

சீமை யதிகாரி சிதம்பரவேள் பெற்றெடுத்த
சோமனெனச் சொல்வதனத் தோன்றலே கண்வளராய். (௨)

பொன்னே நவமணியே பூமருவுங் கற்பகமே
மன்னுலக நாதனென்னு மைந்தனே கண்வளராய். (௩)

சிங்கார மாரன் சிதம்பரவேள் செல்வனெனக்
கங்கா குலந்தழைக்குங் கன்னனே கண்வளராய். (௪)

சொல்லொன்றே யாரிடத்துஞ் சொல்லுஞ் சிதம்பரவேள்
செல்வந் தழைக்கவந்த சீமானே கண்வளராய். (௫)

சட்சிகட்டுச் சட்டத் தராசாஞ் சிதம்பரமால்
பட்சமிக வந்துதித்த பாலகனே கண்வளராய். (௬)

அன்னதானப் பிரபென்றி யாவர்களுங் கொண்டாடுங்
கன்னன் சிதம்பரவேள் கண்மணியே கண்வளராய். (௭)

கட்சிகட்குக் கண்மணியாய்க் கற்றோர்க்கு நற்றுயாய்
மெச்சுஞ் சிதம்பரவேள் மெய்ப்பொருளே கண்வளராய். (௮)

மீனாட்சி யம்மாள்தன் மெய்த்தவத்தா லிப்புவியிற்
றுனாட்சி யாகவந்த சந்ததியே கண்வளராய். (௯)

தெய்வத் திருவருளைச் சிந்தையில்வைத் தன்புசெய்து
சைவத்தைக் காக்கவந்த சாமியே கண்வளராய். (௰)

---

## மதுரைத் தமிழ்ச் சங்க வித்வான்
## திரு. சுப்பிரமணியக் கவிராயரவர்கள் பாடிய
## நடுவெழுத்தலங்காரம்.

நலமருவு வாழ்த்தின்பே ரம்பையின்பேர் தாய்க்கு
நவில்பெயரா காயப்பேர் நல்லபரி யின்பேர்

பலமலியு மிப்பிறப்பின் பேரிவையோ ராதிற்
பன்னூறடு வெழுத்தானும் பகர்பெயராக் கொண்டாய்
நிலவுமப்பேர் முன்பின்சே ரவைமுறையே யடுத்தார்
நிகழன்ன முடன்கொளச்செய் தெவர்க்கு நிகழ்த்தாம
லிகவுடைய னாகியரற் கியற்றி யாண்டவ்
வியல்பொழுது மறவாம லெழினீதி யுரையே. (க)

வேறு.

திருவிருந்து வாழ்மனையான் சிதம்பரசற்
குணன்றன்னைச் சேர்கற் றோரை
வருவிருந்து திகவிசொல்வீ ரெனக்கேட்டுப்
பரிசுதவி மகிழ்ந்தன் னூர்க்குப்
பெருவிருந்து புரிநயத்தைக் கம்பனுங்கும்
பனுமெனப்பேர் பெற்றீர் நீவி
ரிருவிருந்துங் கழுறவுரைப் பீரெனிலப்
பாவடங்கா தெனச்சொல் வாரே. (உ)

---

## ஸ்ரீவைகுண்டம் திரு. ஆறுமுக தேசிகரவர்கள் சொல்லியது.

கல்வியிற் செல்வந்தன்னிற் கருணையிற் புகழ்பெற் றோருஞ்
செல்வனுஞ் சிதம்பரப்பேர் மன்னனைச் சென்று கண்டா
லல்லல்செய் வறுமைதானு மகன்றுபோய் நீங்கிற் றன்றே
மல்குதாம் புறநல்லூச லெனச்சுழல் மடமை நெஞ்சே.

---

## ஆழ்வார்திருநகரி திரு. பெரிய திருவடிக் கவிராயரவர்கள் நிருபம்.

சீர்கொண்ட நமதிந்து தேசமே யுலகிற் செழிப்புறச் செய்யு முசிதா
செப்பிவரு வோர்மிடி யகற்றித்தினந்தொறுஞ் சேமங்கொடுக்குமதனே
யேர்கொண்ட கஞ்சத் திலங்கிடு நளினித னின்னருட் பெற்ற சிம்மா
வெப்பொழுது மொவ்வோ ருயிர்க்குண மறவா திணங்கி டுமிசை
தீபனே.

கார்கொண்ட கையனே கவிவாணர் கட்கெலாங் கருதி யேயருடீரனே
கருணைகொடு வாசிப்பு மாஞான முற்றவர் களிகூரு மினிய கன்ன
பேர்பெற்றவாவெனது கவியினடு நாயகா பேசரிய சீர்மையுடையோய்
பேணியிப் புவிதனை மன்னரச சாட்சியாப் பிரியமொடு வாழ்கு வாயே.

---

## சேற்றூர் சமஸ்தான வித்வான்
## திரு.மு.ரா. அருணாசலக்கவிராயரவர்கள் பாடியன

கற்றாரைக் கற்றாரே காமுறுவ
    ரென்றௌவை கருதிச் சொன்ன
சொற்றான் மெய்யாகி லொன்றுங் கல்லாத
    வென்போல்வார் தூய நின்னை
யுற்றாசை மேலிட்டுப் பற்றுதலாற்
    கற்றோரென் றுரைக்க வேண்டு
மெற்றாலுஞ் சிறந்தகல்விப் பொருள்படைத்த
    சிதம்பரப்பே ரிறைவ ரேறே. (க)

மணங்கமழ்நின் சீர்த்தியினைச் செய்யுளா
    லுரைப்பதற்கு வந்தேன் யாதே

விணங்குநா லுணர்பெரியோ ரெவ்விதத்தே
னுஞ்சிறந்தா ரென்ற நல்லார்
குணங்களுரைப் பதுநன்றென் றிசைத்ததனு
லுயர்ந்தவர்தங் கொள்கை யீதே
வணங்குவார்க் கருள்புரியுஞ் சிதம்பரசற்
சனசமூக வள்ளற் கோவே. (உ)

கடையிலுநின் னிடத்திலுமாம் பிரபலங்கள்
பகரு வருட்கலந்து வைகுந்
தடையில்புகழ் மலிதிருமந் திரநகரே
தனதாகத் தங்கு நீநல்
லுடையிலணி யில்வனப்பின் றெனக்கல்வி
கற்றதனுக் கொப்ப மேலாங்
கொடையிலுயர் பெருந்தகைமை கைக்கொண்டாய்
சிதம்பரசற் குணபூ மானே. (ங)

உலகிலுதித் திடிற்புகழோ டுதிக்கவெனு
மொருகுறளி னுண்மை யோர்ந்தே
யிலகுமந்தப் புகழ்பெறுவ தெவ்விதமென்
ருய்ந்துதன்பா லிரப்பார்க் கீயு
நலமலியுங் கொடையினு லாவதெனு
வள்ளுவர்சொன் னயத்தாற் கண்டு
பலர்புகழு மீகையினை யீகையுற்ருய்
சிதம்பரபூ பதியாம் வேளே. (ச)

கற்பகமே கேட்டதெலாங் கண்டவர்க்குக்
கொடுக்குமெனக் கற்ருேர் சொற்ரு
ரற்பகலா வஃதெங்கு னிருப்பதென
வற்பகலா தலைந்து தேடி

பொற்பகலா நின்னிடத்தி லேவந்து
பெருமகிழ்ச்சி பூப்பக் கண்டே
னற்பலனே யினிப்பெறலாஞ் சிதம்பரசற்
குணமிகுந்த நாவ லோனே. (ரு)

விண்ணிலமர் கொண்டலுங்கன் னனுநின்போற்
கொடையினன் மேலா மென்றிங்
கெண்ணினரே றற் புகழன்றிப் புண்ணியநின்
போலந்த விரண்டு மிந்த
மண்ணிலுறு மோபிறர்தம் பொருளையே
யெடுத்தென்றும் வழங்க லாலே
யுண்ணிறைபே ரன்பமையுஞ் சிதம்பரசற்
குணநிதியா முதார மாலே. (சா)

மாமிமரு மகளுலகில் வாஞ்சை யுற்றோ
ரிடத்தினிலே வசியா ரென்றிப்
பூமியிலுள் ளார்சொல்வ ரவர்நாண
நாமாதும் பூமா துஞ்சேர்ந்
தாமினிய நட்புறீஇ நின்னிடத்தி
லிருப்பதனை யறிந்து கொண்டோ
நாமிஃதோர் புதுமையென்ப தேதேற்றஞ்
சிதம்பரநன் னலமிக் கோனே. (எ)

## சேற்றூர் சமஸ்தான வித்வான்
## திரு. இராமசுவாமிக் கவிராயரவர்கள் நிருபம்.

இந்தவொரு தரைமீதே ரெயிலோட
வதிசயத்தோ டினிதாய்ப் பார்த்து
வந்தவரே யதுபெரிதா வந்தரெயிற்
கெண்மடங்கா வருவே கஞ்சே
ரந்தமிகுங் கப்பலையே யுங்களுக்கு
முன்னீரி லணியா யோடச்
செந்தமிழ்தேர் சிதம்பரவேள் செய்துமுடித்
ததுபெரிதா செப்பு வீரே. (க)

அப்பணியுஞ் செஞ்சடிலர் சங்கரரா
மேச்சுரர்தா ளன்பாய்ப் போற்றி
யெப்பணியும் பணிந்துசெய்யு முலகநா
தேந்திரன்புத் திரனென் றோது
செப்பலைமா முலைவிழியார் மடல்வரையுஞ்
சிதம்பரவே டீரங் கொண்டு
கப்பலையப் பலைமீது தானடத்திப்
பெரும்புகழைக் கைக்கொண் டானே. (உ)

ஒன்றியெழு பதுவெள்ளங் கவிகளிலக்
குவன்மற்றோர்க் குயிருண் டாக
வன்றுதழை யிலையுறுசஞ் சீவியைமா
ருதிகொணர்ந்த தரிதோ மேலா
மன்றமதி சிதம்பரவேள் கோடான
கோடியெனு மனுபி ழைக்க

வின் றுநவ மணிவிளைகப் பலைக்கொணர்ந்தா
னிதுபெரிதோ வியம்பு வீரே. (௩)

கலங்கலமா வாரிவிட்டான் கற்றவரெல்
லாமகிழக் கனக மீண்டுங்
கலங்கலமா வாரிவிட்டான் கொழும்புநிதி
வாரிமற்றோர் களுக்கு மீய
விலங்குமதி யாததுரி யோதனன்பாற்
பாண்டவர்க்கைந் தீவா யென்று
னிலங்குமதி யானனத்தான் சிதம்பரபூ
பதியெனும்பே ரிடப்பெற் றோனே. (௪)

வல்லாளன் சிதம்பரவேள் கப்பலுங்கேட்
டோர்க்குநிதம் வழங்க லாலே
யெல்லாருங் கற்பதரு வென்பரஃ
திலையெனும் பேரெய்த லாலே
பொல்லாத வண்டர்களைப் பொருந்துதலாற்
கண்ணீரைப் பொழித லாலே
சல்லாப நடையிலதாற் கவுளதா
லிதற்குநிகர் சாற்றொ ணாதே. (௫)

அன்றிலங்கை நகர்காணக் கவிகளுற
வைப்பிடித்தோ ரணையுங் கட்டி
வென்றிபிரா கவன்கண்டா னப்படிக்கின்
றித்தனது வினையத் தாலே
நன்றியுறுஞ் சிதம்பரவேள் மனுக்களெலா
மெவ்வுலகு நயந்து காண
வின்றிரண்டு கப்பலையும் வாவழைத்தா
னிவன்புகழ்மற் றெவர்க்குண் டாமே. (௬)

தேனூற்றுஞ் சுனைப்பொதிகை முனிவனெனச்
செந்தமிழைச் சேர்ந்தோ யுன்மே
ஞானூற்றுக் கோவைதனைப் பாடவெண்ணி
யொருபாகம் நவின்றேன் முன்னூன்
மேனூற்று வரையும்வென்ற வீமாமற்
றதும்பாடி வியப்புற் றங்குத்
தானூற்ற மொடுவருவேன் றப்பாதுன்
னெழுத்துவாத் தயைசெய் வாயே. (எ)

---

## மதுரை தமிழ்ச்சங்க வித்வான்
## திரு. சே. ரா. சுப்பிரமணியக் கவிராயரவர்கள்
## பாடியவை.

சீராற்றுப் பாய்ச்சிகடற் பச்சியெனு
நாவாயாற் செயங்கைக் கொண்ட
பார்வேந்தர் மரபில்வந்தோ னுதலிற்பாண்
டித்துரைபூ பால னென்று
நேரான்சு தேசியர்தஞ் செல்வமென
விருநாவாய் நிலவுகின்ற
வேரார்சங் கத்தலைவ னெனவிருப்ப
தாற்செயமே யெய்துந் தானே. (க)

முன்னொருப கீரதமன் கங்கைகொணர்ந்
தாற்போற்பன் முயற்சி யாற்சீர்

பன்னுசிதம் பரவள்ள லிருநாவாய்
கொணர்ந்தானென் பார்பல் லோரம்
மன்னவன்றன் முன்னோர்க ளின்பமுறச்
செய்தனனிம் மாநிலத்தி
லின்னரிவ ரெனவொண்ணாச் சுதேசியரின்
புறச்செயலா லிவன்மே லோனே. (உ)

அயர்ச்சியின்றி யூக்கமுடன் சிதம்பரவேள்
செயுமுயற்சி யாலெந் நாளு
முயர்ச்சிதிக ழிருநாவாய் கொணர்ந்துசுதே
சியர்க்குநிதி யுதவ லாலே
முயற்சிதிரு வினையாக்கு மென்றுதிரு
வள்ளுவனார் முன்மொ ழிந்த
நயத்தினைக்கண் ணாற்கண்டோங் கண்டோமென்
றெவருமினி நவில்வர் தாமே. (௩)

திருமார்பன் றாசரதி வானரர்க
ளுடனிலங்கை செல்ல வாய்ந்தே
யொருசேது மலைகளா லியற்றினனா
வாயிவைபோ லுறாம லென்னத்
தருவார்மந் திரநகரிற் சுதேசியரெல்
லாமின்பந் தழைக்க வந்த
விருநாவாய்க் கிவ்வுலகி லெத்தனைநா
வாயுமிணை யியம்பொண் ணாதே. (௪)

இலகுசுதே சியரெல்லா மொற்றுமையாய்ப்
பலமுயற்சி யியற்றிற் செல்வ

நிலவமிகு சுகமுறலா மென்பதற்கோ
ரறிகுறியா நிகழெந் நாட்டுக்
குலவுவளங் களுங்கொண்டு கூலம்போன்
மந்த்ரநகர் கொழும்பெங் குஞ்சூழ்ந்
துலவுசுதே சியச்சங்க நாவாய்கள்
வாழிநீ டூழி மாதோ. (ரு)

---

## திரு. தெய்வநாயகப் புலவரவர்கள் பாடிய

## ஆசிரிய விருத்தம்.

பொன்னுடர் புகழ்சிதம் பரநாத னைத்தினம்
போற்றித் தொழுந்தாசனே
புண்ணிய தயாளனே சைவவே தாகம
புராணசாத் திரவாசனே
நன்னூவி னுலினிய செந்தமிழ் பாடிவரும்
நாவலர்க் குபகாரனே
ராசசபை மெச்சும்ப்ர சங்கனே யினியமொழி
நவிலும்வாய் வித்தாரனே
யெந்நாளு நலம்வளர்ந் தோங்கிய சுதேசிகட்
கிறைவனே சத்துருக்க
னெனுமதக் கரியைமிக வேதோற் றிடச்செயு
மெங்கள்துரை செயசிங்கமே
கன்னு வுதாரனே கொண்டலெென வேயிரு
கரங்கொண்டு நிதம்வழங்கு
கனசெல்வ னே சிதம்பர வீரனே யெனது
கவிநலங்கண் டறிவையே. (க)

அட்டதிசை யெங்குமே மெச்சவே கொடிகட்டி
யசையாத மணிகட்டியே
யளகா புரிக்குபே ரக்குரிசி லென்னவே
யரசாட்சி புரியுநின்பால்
திட்டமுட னேகலைக் கட்டாதி காரஞ்
செலுத்திடுஞ் சட்சுநீதி
செய்திடுங் கவர்ண்மெண் டுத்தியோ கஸ்தரவர்
சேர்ந்துமே வந்துகோர்ட்டுச்
சட்டமதை யறியநின் பேட்டிகண் டாலோ
சனைகளுந் னிடத்தினிதமுந்
தான்கேட்ப ரெங்கள்குறை தீரென் றநேகருன்
சமுகத்தில் வந்துநிற்பர்
துட்டரை யடக்கிடுஞ் சிங்கமே புவிபுகழ்
சுதேசிகடமக் கதிபனே
சொலுமந் தரநகர் வாசனீயே சிதம்பரத்
துரைராச செல்வநீயே. (உ)

கப்பலே றிக்கடல் கடந்திந்தி யாவின்மிகு
கபடமா வந்த இங்கிலீஷ்
கம்பெனி வர்த்தகம் நடத்தியிங் குள்ளவர்கள்
கைப்பொருளை யினிமைகாட்டித்
தப்பதா கக்கூடி தாமெடுத் துக்கொண்டு
தமதிங்கி லாந்துதேசந்
தனிலேகு மந்தவெள் ளைக்கார ருக்கிடஞ்
சற்றுங்கொ டுக்கலாகா
செப்பமா நஞ்சுதே சிகள்வர்த் தகத்திற்
சிறக்கவழி காட்டிமிக்க

சீர்பெறச் செயவேண்டு மெனவோங்கு கம்பெனி
சேர்த்துச் சுதேசிநாம
மிப்புவியி லெங்குந் தொனித்திடப் பாரிலுள
தெல்லாம் வருத்தியெவரு
மிச்சையுற வேசெய்த துரைசிதம் பரசுதேசிக்
கிறைவசெய சிங்கமே. (ரு)

---

## ஜெயவீர சிங்காரச் சிந்து.

நாமகள் மாமி கமலப் பூமகள் பூமிபுகழ்
நண்ணு செல்வ வாச துரை ராசனே—பக்தி
பண்ணுவோர்க் கருள்சிதம் பரேசனே யெந்த
நாளுமே துணையாளுமே யவனுகுமே யெனநாடியேதொழு
ஞானதாசனுகவந்தா னென்னவே-மந்த்ர மாநகரில் வாழு
மணிமின்னவே. (க)

மாமறவி சேய்க்கிளைய வீமனவ னேர்க்கிளைய
மாமணிக்கி ரீடனீயே பாரிலே—வந்து
சேமமுட னேசிறந்த பேரிலே மிக்க
மாசிலாத சிதம்பரத்திரு நாமமேதிக ழிந்திரத்தன-வாசனே
சுதேசிமக ராசனே பரமேசனே தயவுகொண்ட தாசனே. (உ)

சொந்தமுனக் கிந்தியாச் சுதேசிகளீ டேறவந்து
தோன்றிய மாமணி யெனச் சொல்லவே-லோக
மூன்றிலு முனக்கிணைவே றில்லையே மகா
சூராவண வீரனுனவ னுவியானது சோரவே யெதிர்
தோன்றிய கோதண்டராம சாமியேவந்து தோன்றினு
னென்னவே சொல்லு. (ங)

சிந்தையின் மயக்கிவாடி நொந்திடவே வெள்ளைக்காரர்
செய்த வர்த்தகக் கம்பெனி தோற்கவே தவஞ்செய்த
நஞ்சு தேசிகளைக் காக்கவே வந்த சீயமே திரு
மந்த்ர மாநகர் மீதுமே யொரு-சந்த்ரனுகவே
யுதித்தா யிந்தி யாவிலே வாழ்சு தேசிகட் கரச னீயே பூவிலே.

தங்கு மிங்கி லாந்து தேச மெங்குஞ் சென்று
டில்லிபம்பாய் தானிலங்கை கல்கத்தா வங்காளமே
மோரங் கிலங்கு சென்னை மலையாளமே சென்று
தானுமே மகாராசராச மைசூரி ராசனை-நேசமாகவே
சந்தித்துக் கலந்து கூடிப் பேசவே நீயுஞ்
சிந்தித்துச் செய்தாய் வானச் சுதேசியே. (ரு)

பொங்குகடன் மீதினி லங்குதிற லேழுபரி-பூட்டியோ
ராழி ரதத்தி லேறியே-யொளி காட்டியே
கிரணங் களைச் சீறியே-கமழ்
போது மாமல ராகவே வரு பானு நேர்நிலா தோடுமோர்பனி
போலிங் கிங்கிலீஷ் வர்த்தகக் கம்பெனியே-யாக
ஞாலந் தனில்வந்த வீரவா னீயே. (சு)

செப்பமா யிலங்குபுகைக் கப்ப விலங்கை யனேக
தேசஞ் செல்லவே வேண்டு பொன்னுமே-கொடுத்
தாசை மாயச் சுதேசிக் கப்ப லென்னுமே
பேரைச் செப்பவே புவி-யாளு மன்னவ ரொப்பவே
யுனை மெச்சவே துரை சிங்கமே-யோங்க வுன்பேர் விலாசமே
புவி யெங்குமே வர்த்தக முன்னால் வாசமே. (எ)

இப்புவியில் வாழுஞ் சுதேசிப் புகழ் துலங்கிடவே
யிந்தியா வேளாண்குல மீதுமே-தோன்றி
வந்தசெய சிங்கநீ யெப் போதுமே
பரமேசனுந் துணையாக நின் றுனையே
சுதேசிக ளான பேரெலா மெங்கள் செல்வராச னெனப்
போற்றவே—யருள்
மங்களமாச் செய்தா னுன்பேர் சாற்றவே. (அ)

---

## ஆசிரிய விருத்தம்.

வட்டவா ருலகினுன்பேர் சொல்லிற் சீறி
வருமரவ மஞ்சியோடு
மதலையழு வாய்குரா லொடுங்கிடும் பாலையும்
வந்துகா கந்தொடாது
துட்டவீ ரப்புலியு மெட்டியடி வையாது
சொன்னேன் மதக்குஞ்சரந்
தோற்றுவிழ வருமரிச் குருளையே யீசனுன்
துணையுனக் காதலாலே
தொட்டகா ரியமெலா மநுகூல மாகவே
தோன்றிடு மருட்பாவலர்
சொற்கவி நலந்தரு முனக்குநிக ரானைநான்
சொல்வே னுனைப்பகைத்தோர்
நட்டமா கிடுவரிதை யெனதுகவி யாலிந்த
நாடறிய நானுரைத்தே
னற்சுதே சிக்கிறைய னேசிதம் பரவீர
ராசனே யுல்லாசனே. (கூ)

சற்றுமே யஞ்சி ரெனத்தஞ்ச மென்றோர்
தமக்குறுதி சொல்லியவரை
தாங்குந் தயாளகுண வள்ளலே மிகவந்து
தழுவுகலி யானைத்தலே
யற்றுமே விழவே யடித்திடும் புண்ணிய
கோளரியே கொடுக்குங்கொடை
யாளியே தினகரன் புதல்வனே கொண்டலே
ரங்காத் துரைமன்னனே
யுற்றதோர் தில்லைச் சிதம்பரச் செல்வனே
யுன்பங்கில் வாழ்கிறேனென்
றுலகெங்கு மேதெரியு நானுமே யறிவே
னுனக்கிணக ராருமில்லை
கற்றதோர் வாயினன் மற்றோர்கண் மேலினிக்
கவிநா னுரைக் காமலென்
கவலைதீர்த் தருள்சிதம் பராச னேயென்
கவிக்குதவு விதுசமயமே. (ம)

கூடிடுஞ் சபையோர் மதிக்குமா லோசனை
குறிப்பா யுரைக்குநீதிக்
கோர்ட்டாரு மொப்பவே வக்கீல்மா ரதிசயங்
கொளவே வழக்கையெவரு
நாடிடும் படிமிக்க காடுசொலு முடர்க
ணடுங்கச் சமர்த்தனாக
நவிலும்வ்வ காரனெவ ருக்குமே சாதுரிய
நளினவார்த் தைப்பிரசங்கன
பாடிடுஞ் சங்கீத மோகன நாமகளருட்
பனுவலர் சகாயனீகை

பட்சந் தயாளமன் புடையவ னிவன்றயா
பரனிவ னல்லொழுக்கன்
றேறிடுந் தொண்டர்து தி இல்லேச் சிதம்பரச்
சிவகாமி கேள்வனன்பன்
செகமெலாம் புகழ்சுதே சிக்கிறைவ னிவனே
சிதம்பரச் செயசிங்கமே. (ம௧)

செகமெலாம் புகழ்நலன் வளர்ந்தோங்கு மிந்தியாச்
செல்வச்சு தேசிகடமைச்
சேர்த்துலகில் மேன்மையுற வேசெய்த துரைவீர
சிங்கமே யிந்நாளிலென்
னகமெலா நொந்திடுங் கவலைதீர்த் தின்பசுக
மடையவே செய்யவெவரா
லாகுமென் றெனதுகா ணேவேவோ டிச்சென்
றலைந்துபார்த் ததிலெங்குமே
புகழெலா மோங்கவே யுன்பேர் தொனிக்கவே
புண்யபூ பதியென்னவே
புவியோ ருரைத்திடக் கேட்டுநா னெனதுகலி
போக்குவா யென்றுன்றனற்
சுகமெலாம் பெறலா மெனத்தேடி யுன்றனைச்
சொந்தமாய் நம்பிவந்தேன்
றுணைநீ யெனைக்காப்பை யேசிதம் பரவீர
துரைராச வுல்லாசனே. (ம௨)

வேறு.

வேண்டியபே ருன்னுலே மேன்மைபெற்று ரெனப்புவியோர்
விளம்பக் கேட்டீங்

கீண்டியவாழ் வுன்றாலே யானுமே பெறலாமென்
றெண்ணி வந்தேன்
பாண்டியபூ பதிசிதம் பரசெல்வ மாமணியே
பருதி மைந்தன்
ஆண்டியமா புண்ணியத்தைத் தீண்டியமா னீயெனவே
சொல்லி னேனே. (௰௩)

எந்நாளுங் கொண்டலென வழங்குகின்ற புகழ்சிறந்த
வீகை கொண்ட
கன்றாவு தாரனெங்கள் துரைசிதம் பரவள்ளல்
காதல் கொண்டு
மின்றாரும் பொருளீவன் புலவோரே வாருமென
விரும்பிக் கிள்ளை
தன்றனைசை யாலழைக்கு மாளிகையில் வீற்றிருக்குந்
தனவா னீயே. (௰௪)

என்பேரைக் கண்டறிவா ரென்கவியாற் செங்கமலத்
திருக்குஞ் செல்வி
பின்பேரைக் கண்டறிவார் வாழ்வினாற் புவியாளும்
வீர செங்கோல்
மன்பேரைக் கண்டறிவார் நீதியர சாட்சியால்
வள்ள லேயுன்
றன்பேரைக் கண்டறிவார் சிதம்பரவேந் தேயுனது
தருமத் தாலே. (௰௫)

கோனினைத்தாற் குடிகளுக்கு நலம்பெறயா வையுமுதவக்
கூடும் வேதன்
முனினைத்தான் மானிடர்க்கு நீண்டாயுள் வரமருளத்
தகுமே னக்கு

நீநினைத்தால் வேண்டியதெல் லாமுன்னுற் றாக்கூடு
நினைய டுத்த
நானினைத்தாற் சிதம்பரவேள் வாழ்கவெனப் புகழ்ந்துகவி
நவிலு வேனே. (௧௬)

வண்டாருந் தெரியலணி மார்பசிதம் பரவேந்தே
வாயா லுன்பேர்
விண்டாலும் வினைதீரும் விருப்பமா யுன்முக
விலாசத் தோற்றங்
கண்டாலுங் கலிதீருங் கவலைகொண் டோருன்றனையே
கதியென் றண்டிக்
கொண்டாலு மின்பசுக வாழ்வனைத்துங் கைகூடுங்
குவல யத்தே. (௧௭)

என்போலே துன்பமுற்று ரெவருமிலை கடுஞ்சிறையி
லிருந்த ராமன்
மின்போலே தயங்குகின்றே னெனைக்காக்க வுனையலது
வேறே தக்கோ
ருன்போலே கிட்டாது துணைநீயே தனுவேந்துக்
குதவு தோர்மா
மன்போலே யரசாள வந்தசிதம் பரசெல்வ
வள்ள னீயே. (௧௮)

## ஆசிரிய விருத்தம்.

எங்குமே புகழ்திரு வணங்கபுர மாநகரி ராசா விடத்தின்முன் னென்பிதா வைப்பெற்ற முன்பிதா வேந்தக் கிரண்டாவ ததிகாரமா,யங்குமேவுத்தியோகஞ்செய்துமுயிர்வயதடைந்து விண்ணுல கெய்தவே யப்பா லெனைப்பெற்ற தந்தையு மிலங்கை சென்றதில் வர்த்தகம் பெரியதாய்த், தங்கவே தேடியது நாற்பதா யிரமதுந் தவறினது பொருள்நட்டமாய்த் தமியேனு மிங்கிலீஷ் பாசாகி மேன்மையாய்ச் சர்க்காரில் வேலைபார்த் தேன், மங்கவே யெனதுகண் பார்வைமறை வானது வருந்தி. னேன் கவிகள்பாட வந்துநா மகளருட் டெய்வநாயக வித் துவா னெனப்பேர் கொண்டனே.

பொல்லாத கலிப்புலிவந் தெனைவிரட்டு வதற்கஞ்சிப்
புலியி லுன்னை
யல்லால்வேறு துணையிலையென் றேடியுன தடைக்கலமா
யடைந்தேன் யானு
மல்லாரும் புயவேந்தே கைவிடில்யான் பிழையேய னென்
வருத்தந் தீர்த்திங்
கெல்லாரும் புகழுவெனைக் காப்பைசிதம் பரதுரை
ராசேந்த்ர னீயே. (உ0)

---

## ஸ்ரீ சகஜாநந்த ஸ்வாமியார் எழுதிய நிருபம்.

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்று ரெனக்கழறு—மாமறைக்குச்

சான்முச் சிதம்பரமென் தந்தை நினைக்கண்டேன்
நான்மாறென் செய்வே னவில். (க)

கைம்மாறு வேண்டா கடப்பாட்டி னென்றனக்கு
மெய்ம்மாட்டி நின்றருளும் வித்தகனே—செம்மறையின்
பாவனைத்துஞ் சிந்தை பதித்தேன் சிதம்பரமென்
தேவநின தின்னருளாற் றேர்ந்து. (உ)

சாவா மருந்தெனவே தற்பரனார் வள்ளுவர்செய்
பாவா லறிவெனக்குப் பாலித்த—தேவா
சிதம்பரமென் சற்குருவே சிந்தையினில் நின்னின்
பதம்பெற்றே னென்றும் பணிந்து. (ங)

---

## ஓட்டப்பிடாரம் சங்கீத வித்வான் திரு. சு. முத்துசுவாமிப் பிள்ளையவர்கள் நிருபம்.

அத்தனருள் பெற்றே யடுத்தோரைக் காக்கின்ற
சித்த முடைய சிதம்பரனே—நித்தம்பா
உன்மேலே நாட்டம்வைத் தோது முத்து சாமிபிள்ளை
தன்மே லருள்மிகவே தா.

செகத்திருளை நீக்குகின்ற செங்கதிரோன் போலென்
அகத்திருளை நீக்குகின்ற வண்ணல்-இகத்துன்
முகத்தினைக் கண்டு மொழிவதற் கின்றித்
திகைத்துநிற் கின்றேன் றினம். (உ)

---

## ஆழ்வார்திருநகரி பென்ஷன் ரெவினியூ இன்ஸ்பெக்டர் திரு. அனந்தபத்மநாப பிள்ளை அவர்கள் எழுதியது.

(16—2—14)

அருளது வடிவாய்த் தோன்றி அமரர்கட் கரசையீந்து
குருமுனிக் குபதே சத்தைக் கூறிய முருகா நாளும்
அரியவென் சினைகனென்றே அறைந்திடுஞ் சிதம்பரத்தைக்
கருணையால் காப்ப துன்றன் கடனெனக் கழறி னேனே.

---

## சவரிமங்கலம் வித்வான் திரு. சிதம்பரவேலுப் பிள்ளையவர்கள் பாடியன.

செஞ்சடை முடிமே னதிமதி புனையுஞ்
சிவபரம் பரனிடத் தமர்ந்த
மஞ்சமர் குழல்சே ருலகநா யகிநின்
மைந்தனெஞ் சிதம்பர வள்ளல்
தஞ்சமென் றடைந்தோர் தம்மையா தரிக்குஞ்
சற்குண நிதிசிறை தவிர்த்தா
டஞ்சலென் றருள வீதுநற் சமைய
மமலையே விமலநா யகியே. (௧)

நாயக மாயிவ் வுலகிலே லைகட்கு
நன்மையே செய்தனை வருக்குந்
தாயக மாய்க்காத் தருள்சிதம் பரவேள்
தனைச்சிறைப் படுத்துதல் முறையோ

தூயநின் கோயிற் றிருப்பணி முடித்தோன்
சுதனென்ப தற்கிலாய் கொல்லோ
வேய்வனத் தமர்ந்தோ னிடத்துறை பரையே
விமலையே யுலகநா யகியே. (௨)

உலகநா யகியே யுன்சின காத்தி
லுலப்பிலாத் திருப்பணி முடித்த
உலகநா தப்பே ருத்தமன் றவத்தி
லுதித்திவ் வுலகுளோர்க் கெல்லாந்
திலகமே யெனவாழ் சிதம்பர வள்ளல்
சிறைதவிர்த் தம்பிலா ரியற்று
கலகமே தவிர்த்தாண் டருள்பரம் பரையே
கலிதவிர்த் தாதரித் தருளே. (௩)

ஆதர வின்றி யலையுமே ழைகளுக்
கரும்பசி தணிக்குநன் முயற்சி
தீதறப் புரியுஞ் செயலுடைச் சுகுண
சிதம்பர வள்ளலுக் கடுத்த
வேதனை தவிர்த்தாண் டருள்செயா திருத்தல்
விதியல நின்பணி புரியுங்
கோதக லுலக நாதவேட் கருளா
திருந்திடிற் குற்றமா முனக்கே. (௪)

குற்றமென் றனையான் கூறிடத் தாமோ
கொதிப்பினு லுரைத்தன னடியேன்
கற்றமே தாவி யோரெலாம் வழுத்துங்
கடவுள்மந் திரநிக ரெனவே
யுற்றிடும் வந்தே மாதர மெனுமோ
ருரையுத வாதென விதுசெய்

பெற்றியோர்க் குணர்வொன் றுதித்திடி னிந்தப்
பெருந்துய ருலகுளோர்க் கிலையே. (ரு)

இலையெனத் திரியு மேழைகட் கிரங்கி
யிவர்பசிப் பிணிதவிர்த் தின்ப
நிலைபெறச் செயுமா றெண்ணியொற் றுமைக
ணோர்ந்திடில் வாழலா மென்றுங்
கலகமற் றெவருங் கைத்தொழி லியற்றல்
கருமநற் கருமமா மென்றும்
பலர்செவிக் குரைத்தல் முறையல வென்றாற்
பாவமே பாவமே யந்தோ. (சு)

அந்தரி விமலை யாரணி யுலகாண்
டருள்பரி பூரணி யுனது
சொந்தமா ளிகையா மாலயப் பணிசெய்
தோன்றலா முலகநா தேந்திரன்
மைந்தனிவ் வுலகோர்க் குறுதுய ரகற்றும்
வள்ளலிவ் வருத்தம தடைந்தால்
இந்தமா நிலத்தி லெவர்துய ரடையா
ரினிதரு ளுலகநா யகியே. (எ)

உலகுளோ ரெவரு மோருத ரத்தி
லுதித்துளோர் போலவொற் றுமையா
யிலகிடச் செயுமா றெணியதற் கான
வெழிற்பிர சங்கமே நடத்துங்
குலமக னெமையாட் கொளுந்துரைச் சிங்கங்
குறிப்புடைச் சிதம்பர வள்ளல்
நிலைபெறி னுலக நிலைபெறு மருள்செய்
நெடியமாற் குரியசோ தரியே. (அ)

தரியலர் முன்னோ ருகத்தினிற் கற்ப
    தருவினைக் குறைக்கநேர்ந் ததுபோற்
பெரியதென் னளகைப் பதிவளர் பெரியோன்
    பீடுறு முலகநா தேந்திர
னுரியமெய்த் தவத்தால் வருசிதம் பரவேட்
    குருநிலை புகுந்தினு ரந்தோ
சரியல வுலகாண் டருள்பரம் பரையே
    சங்கட மகற்றியாண் டருளே. (௯)

அருமைநா யகமிவ் வுலகிலே ழைகளுங்
    கருநிதி யன்பருக் கன்பன்
கருணைவா ரிதிமா கலைவலோ னெனது
    கண்மணி விண்மணி சுரபி
தருநிகர் கொடையான் சிதம்பர வள்ள
    றனைச்சிறை தவிர்த்திடி னுலகம்
பெருவளங் குலவு முலக நாயகிநற்
    பேறவற் காகுமா றருளே. (௰)

அந்தரத் தமர ரிடரெலா மகற்றற்
    காயவ தரித்தரு ளிராமச்
சந்திரன் வனம்போ யினனெனக் கேட்டோர்
    தமைநிகர்த் திந்தமா நிலத்தோர்
சிந்தைநைந் துருகி யாற்றுத லினது
    திருச்செவி தனிற்புக விலையோ
மந்திர வடிவா யமர்ந்தருள் பரையே
    வாலையே வுலகநா யகியே. (௰௧)

அப்பலை சூழிவ் வுலகிலே ழைகளுக்
    கரும்பசிப் பிணியெலா மகற்றுங்

கப்பலைத் திருமந் திரநகர்க் கிரண்டு
கப்பலைக் கொணர்ந்தகா வல்லை
யிப்புவிக் கரச சிருஞ்சிறை யிடுதற்
கேதுவொன் றில்லையே யெழிலார்
முப்புர தகன சவுந்தரி யீது
சமையமுன் னின்றுகாத் தருளே. (௰௨)

கற்பக தருப்போ லடைந்தவர்க் குதவுங்
கருணைவா ரிதிதமிழ்க் கலைதேர்
விற்பன னனதா லயத்திருப் பணிசெய்
வேலையே வேலையாக் கவனித்
தற்பக லியற்று முலகநா தேந்திர
னருந்தவப் புதல்வனீ தடைதல்
நற்பரி சலவே யுலகநா யகியிந்
நாட்கிறை யகற்றியாண் டருளே. (௰௩)

பஞ்சைகள் சேரத் திரண்டொரு முனிசி
பாலுறு மதிப்பிலா தவர்கள்
கொஞ்சமா மதியா லியற்றுதீ வினைக்காக்
கோதிலா வுலகநா தேந்திரன்
மஞ்சனை யமுத சஞ்சீவி நிகராம்
வள்ளலைச் சிறைபிடல் வழக்கோ
தஞ்சமென் றடைந்தோர் தம்மையா தரிக்குந்
தயாபரி யுலகநா யகியே. (௰௪)

புல்லர்க ளறிவி லாதுசெய் பிழைக்காப்
புவியெலாம் புரக்கவந் துதித்த
செல்வநா யகனெஞ் சிதம்பர வள்ளலைத்
தெறுசிறைப் படுத்துதல் முறைபோ

தொல்லைதீர்த் தருள்தென் னளகைமா நகர்வாழ்
சோதியே வுலகநா யகியே. (௰௫)

அரச்கனோர் பிழைசெய் ததற்கென்மார் பகத்தி
லம்புநாட் டியதிது முறையோ
இரக்கமெங் குகுத்தா யெனப்புகல் வாலிக்
கிணையதா யறிவுளா ரெவருந்
தரக்குறை வாஞ்சிற் றறிஞர்செய் பிழைபிச்
சமர்த்தன்மேற் சுமத்துத லுலகம்
புரக்குமன் னவர்க்கீ தடுக்குமோ வென்பரென்
செய்வார் புவியிலுள் ளோரே. (௰௬)

புவியெலாம் புரக்கு மரசர்கள் முறையிற்
றவறிடா ரவர்களாற் பொருந்துந்
தவிசில்வீற் றிருக்கும் பேரதி காரத்
தலைவரு முறைமையிற் றவறார்
செவியுண வெனுநற் கேள்வியில் லாரிற்
சிலர்புகல் பொய்க்கரி யலவோ
கவிஞர்கள் திலகன் றனைச்சிறைப் படுத்தக்
காரண மாயின தந்தோ. (௰௭)

அம்புவி தனையா ளரசர்க்குச் செவிகண்
ணுமெனப் புகலுமம் மாற்றம்
வம்புதே மனுநீ தியிற்சிறந் துள்ளோர்
வார்த்தையொன் றெழுதரங் கேட்டு
நம்பிடத் தகுமே லமைச்சாற் றெளிந்து
நன்குதீ துணர்வரம் முறைமை
யிம்பரி லரச ரகம்புகிற் சிறைமீண்
டுடுவதற் கையமொன் றிலையே. (௰௮)

நற்றமிழ்க் கலைதே ருலகநா தேந்திர
நாவல னியற்றுநற் றவத்தாற்
பெற்றபா லகனென் கண்மணி புலகோர்
பெருந்திருப் பெருந்திரு வடைதற்
குற்றதோர் மாற்றம் புகன்றதே யல்லா
லரசருக் கொருவிதத் தேனுங்
குற்றமொன் றியற்ற வில்லையே யருள்செய்
கோதையே யுலகநா யகியே. (மகூ)

வையகம் புகழு மாசிலா மணிநன்
மார்க்கமே குடிகொளு மனத்தோன்
சைவநன் னெறியோ டறம்பல புரியுந்
தயாநிதி சிதம்பர வள்ளல்
துய்யதோர் சுகுண நிலையதி காரத்
துரைகளின் றிருவுளத் துறுமேல்
வெய்யதோர் காவற் சிறையினை யகற்றி
விடுத்திடற் கையமொன் றிலையே. (உம)

---

## லால்பேட்டை திரு. நா. குப்புசுவாமிப் பிள்ளை யவர்கள் பாடியது.

சத்தியந் தவறாத வுத்தம விவேகியாய்ச் சாது சற்குண யோகியாய்ச் சன்மார்க்க ஞானியாய் நன்மார்க்க நேயராய் சர்வாம்ச மேயாம்ஸராய், கத்திகதை கேடயம் வைத்தகர தீராய்க் கவிராஜர் புவிராஜராய்க் கருணைவ தாராய்க் கல்விப்ர சங்காராய்க் கடவுளுக் கடிய வருமாய், நத்தியே யடைகின்ற

ஏழைகள் மகிழவே நலமளித்திடும் வள்ளலாய் நாதமிரு ஸ்ரீமரன் வ.உ.சிதம் பரமெனும் நாமத்தை யுடைய வேள்தன், புத்திவளர் ஸ்ரீமதி மீனாச்சி யம்மையின் புண்ய துணையாய் வந்தவர் பொருள்பெற்று புகழுற்று அருள்பற்றி வாழ்கவே பூலோகர் மதியோங்கவே.

## டைரி 21—5—14ல் எழுதிய நிருபம்.

நம்மையுந் திருவாக்கிடும் பெருகு நலமெ லாந்தரும் ஞானமும் பயக்கும், இம்மை வேண்டிய பலன்களைக் கொடுக்கு மின்பமுந் தருமில்லறம் பெருக்கும், தம்மையுந் தலைவன் றனைக்காட்டுந் தான தருமமுந் தவறிடா நெறியும், செம்மை யென்பன யாவையு மளிக்குஞ் சிதம்பரம்பிள்ளை திருமுகந் தானே.

## பாளையங்கோட்டை திரு. V. சண்முகம் பிள்ளை யவர்கள் நிருபம்.

1911ம்-ஆு ஜூலை-மீ 30ம்-உ

மன்னுயிர்த் துணைவன் ஞான வள்ளலாம் வள்ளி நாதன்
என்னுயிர்த் துணைவ னிங்ங னெழுதலு மெழுச்சி பொங்கி
இன்னுயிர்த் துணைகொண் டோங்க விருந்தன னியம்பா முன்னம்
உன்னுயிர்த் துணையி னீக்க மோர்ந்தன னுழன்றே னையா! (1)

சந்ததி யளிக்கச் சென்றாள் தார்குழ லென்னு மாற்றம்
தொந்தம துணர்த லாலே சோகம தொழித்துப் போக்கி
சொந்தனை யுறுத்து மேனு நொய்தின்மற் றதனை நோக்கா
சிந்தனை சிதம்ப ரத்தே சென்றிடா தெனவுந் தேர்ந்தேன். (2)

கேவல மற்ப மொன்றைக் கிளர்ச்சியிற் கிட்டக் கிட்ட
ஆவலி லடக்கு நெஞ்சை யதின்வய மாக்கு மென்னில்
ஓவரும் வினையிற் சாரு முயிர்த்துணைப் புணர்ப்பி னீக்கம்
ஏவருஞ் சகிப்ப துண்டே யிணைகொள விகமு முண்டே. ௩.

இயல்பினி லிருக்கு மேற்றத் தியாவுமே யிலையென் றாலும்
அயல்படு மறிவிற் சேர்த லரும்வினைப் பயன தாமால்
கயல்படு கண்ணி நெஞ்சைக் கவரினுங் கவலை நீத்து
மயலறத் தெளிவைச் சார்தல் மாண்புளோர் மதியென் பாரால்

உடலுறு பிணியி னீங்கி யுயர்ந்தவர்க் குறுக ணுண்டோ
கடலுறு மலையைக் காத்தல் கற்பதோ கண்ணிற் றோன்றிப்
படலுறு பண்பிற் றியாவும் பதைப்பறு சித்தத் தொன்றும்
அடலுறு தெனவும் யானோ வறைகுவ னறிவாய் நீயே. ௫.

புணர்ந்தனள் பிரிந்தா ளென்னும் பொய்ம்மொழி புகுந்து பார்க்கில்
தணந்தில ளைய நீயுந் தையலைத் தணந்தா யல்லை
உணர்ந்தனை யுன்னுந் தோறு முற்றன ளுன்னோ டென்றால்
மணந்தரு மாட்சி யுள்ளாள் மருமத்தே வசிக்கின் றாளால். ௬.

தேறுவா யாத லாலே சென்றன சிந்தை செய்யா
தாறுவா யறிவா லன்றி யடுதுய ராற்றப் போமோ
மாறுவாய் மனம்போ காதே மாற்றுவாய் மையல் தீர
ஏறுவா யருளி னல்லோ ரிணக்கமே யெய்து வாயே. ௭.

## திருநெல்வேலி ஹிந்து-காலேஜ் தமிழ்ப் பண்டிதர் திரு. த. மு. சொர்ணம்பிள்ளை யவர்கள் எழுதிய நிருபங்கள்.

(27—3—15)

ஏடெழுதீ யின்று மிளைப்பார்ந்த நேரம்நின்
பாடற் றிரட்டொன்றென் பார்வையென—ஓடிவந்
தஞ்சற் பணியோன் அளிக்கத் திறந்திடஎன்
சஞ்சலஞ்சற் றுத்தணிந்த தால். க.

உள்ள இயல்உளத் துள்ள படிஉரைத்த
கள்ளமிலாய்! தூயநின் கட்டுரைகள்—உள்ளில்
உளங்களிக்கும் ஊறடைவார்க் குற்றதுணை ஆகும்
தெளிவளிக்கும் நன்மருந்தாம் தேர். உ.

(8—6—15)

அடிகள் இயற்றிவெளி யாக்கியஇவ் வாண்டு
படிக்கும் சிறுவர்க்குப் பாடமா வைக்க
அடியனுளம் வேட்கும் அமையுமெனல் நோக்கக்
கடிதிலொவ்வொன் றீதல் கடன்.

---

## நாகை "நீலலோசனி"ப் பத்திராதிபர் திரு. சதாசிவம்பிள்ளை யவர்கள் நிருபங்கள்.

(10—12—14)

சூற்கொழுநன் மேகமெனச் சொன்மாரி பொன்மாரி
சொரிந்த வெங்கள்

வேற்கரனோர் பாற்கரனார் விண்ணுலகஞ் சென்றதன்பின்
மேன்மை யாளா !
ஊர்க்குறுநம் பத்திரிகை யூணிலான் நடையெனவே
ஊருந் தன்மை
யார்க்குரைப்பேன் பொருளிருந்தால் மும்முறையென் ?
தினபதிப்பு மாக்கலாமே.

(12—2—15)

மானூரும் கரத்தானை வாயாரப் பாடிவரும்
வள்ளா லெங்கள்
கோனூருஞ் சிதம்பரப்போர்க் குணவானே நின்கடிதக்
குறிப்பைக் கண்டேன்
தேனூரும் கவிபாடிச் சின்னாளி லனுப்பிவைப்பேன்
சிறிய தந்தை
வானூர வழிகொண்டார் மாயாமல் வைப்பதற்கு
மருந்துண் டாமோ.

---

## திருவாரூர் திருவள்ளுவர் மடாலயம்
## ஸ்ரீவி. வைத்தியநாதசுவாமி ஸ்தபதியவர்கள்
## நிருபங்கள்.

(11—5—15)

தேசாபி மானியாய்ச் செகமெலாந் துதிக்கும்
நேசனிற் சிறந்தோய் நினக்கு வந்தனம். (க)

திங்களைத் தரித்தோன் றிருவரு ளதனால்
மங்களம் நினக்கே வருகுக வருகுக. (உ)

சான்றோர் புகழுநின் றக்கோர் வசன
மூன்றெனும் புத்தகம் முன்வரப் பெற்றனன். (௩)

அகமிக மகிழ்ந்தனன் ஆர்வ முற்றனன்,
சகமதி னின்புகழ் சாற்றியே நின்றனன். (௪)

குங்குமம் பூதியும் குணமுட னனுப்பினன்
எங்கணு முங்களின் இசையது பெருகவே.

(17—5—15)

திருநெல் வேலியிற் றேசாபி மானியாய்
உருவெடுத்துமெய் யுற்றவர்க் கன்பராய்த்
திருவுங் கல்வியுஞ் சேர்ந்துமே வாழ்வுறும்
பெருமையோய் நிற்குப் பேசினேன் வந்தனம். (க)

வந்தனம் செய்து வாழ்த்தி யிதனுளே
தந்தனன் காசி பூதியுங் குங்குமம்
முந்தின தற்குப் பிந்தியே வந்ததால்
இந்தப் போஸ்டில் இவற்றை யனுப்பினேன். (உ)

ஆதலா லிவற்றை யன்பா யணிந்துமே
காத லோடுங் கடித மெழுதுவீர்.
மாது மைந்தரும் மற்றுள நண்பரும்
ஈத லோடுநல் லின்புடன் வாழ்கவே. (௩)

மனமது போல வாழ்வெனும் புத்தகம்
இனமுட னதுவின் றெங்கே யிருக்கினும்
வினவியே யதனை விரைவி லனுப்பிடக்
கனிவி னோடியான் கவனமே செய்தனன். (௪)

வாழி யுங்கள் மனைவியும் மைந்தரும்
வாழி யுங்கள் மனமுறுங் கல்வியும்
வாழி யுங்கள் மனமுறும் நண்பரும்
வாழி யுங்களின் வாழ்நாளும் வாழியே. (ரு)

---

(18—5—35)

அன்பதே உருவாய் அவனியிற் றோன்றி
அரியதோர் திருக்குற ளதனில்
என்பதும் உரியர் பிறர்க்கென வென்னும்
இயல்பினை எண்ணியே யுலகில்
நன்பக லெல்லாம் இடையறா துழைக்கும்
நண்ப! என் அறிவினை விளக்கும்
இன்பமே யுடையாய் என்மனை யோடும்
இறைஞ்சினேன் நின்னிரு பதமே.

(31—5—35)

தருமமும் பொறையும் வாய்மையும் வீரத்
தன்மையும் ஒழுக்கமும் நடுவுந்
திருநற் குணமுந் திருந்துபே ரழகுஞ்
சிறப்புமொண் கீர்த்தியுங் கொடையும்
அருளுமா தவமும் புனிதமும் அன்பும்
அறிவுமோர் உருவுகொண் டாழி
இருநில முதித்தால் என்னவந் துதித்தான்
என்னருஞ் சிதம்பரப் பெயரோன்.

(6—6—35)

கற்றறிவு குலமேன்மை கருணைபெரும் புகழ்ச்செல்வக்
கைமா றெண்ணு
துற்றதுவுங் கொடைசீர்மை ஒழுக்கம் அருந்தவநியமம்
உறவின் கேண்மை
மற்றெதிரி லாத்திண்மை வாய்மைமிகுந் தூய்மைகுணம்
வனப்பு யாவும்
பெற்றுலகில் வாழ்ந்துவரும் சிதம்பரமாம் பிள்ளைபதம்
பேசி வாழ்வாம்.

(5—8—35)

ஆசாரத் திற் கொடையில் அறிவில் விவகாரத் தில்
அன்பிற் சொல்லும்
வாசால கத்தினுயர் மதியில்நிறை சம்பத்தில்
வாய்மை தன்னில்
தேசாதி பாதம்வரை வடிவழகில் பெரும்புகழிற்
கெம்பீ ரத்தில்
ஈசாதி தேவதைக ளிடத்திலன்பிற் சிதம்பரமாம்
பிள்ளை யென்பார்.

---

## மலாக்கா ஜேசின். திரு. நெ. வை. செல்லையா அவர்கள் நிருபம்.

(14—7—19)

கார்தவழு மாடங் கதித்தோங்கு சென்னையயற்
பேர்வளர்செய் யோங்கு பிரம்பூரிற் — சீர்வளரும்
வி. ஓ. சிதம்பரவேள் வீறசமு கத்திறுதான்
பி. ஓ. செலுத்தப் பெறும்.

(19—4—19)

மாற்றுரு மடிவணங்கு மாண்புடைய சிதம்பரவேண் மகிபமூவா
றேற்றாண்டு மேடமதி பிரம்பூர்நும் மில்லனுகி யினிதனாவி
வீற்றிருந்த வமயமிளம் பூரணமச் சிடுவதையும் விள்ளக்கேட்டு
நூற்பிரதி தனிலெமக்கு மொன்றளித்தல் வேண்டுமென நுவன்றிட்
டேமால்.

கூறிவரு நிருபமுக மளித்தூர்க்குச் சென்றுபல குறைவினுலே
ஊறியவன் பொடுவருமென் றெதிர்நோக்கி வரைதலின்றியுற்றுமீண்டு
தேறியிவணிருக்கின்றேம்விளம்பியநூன்முடிவுபெறின்சீர்த்திமிக்கோ
வீறிவர வி.பி.யி லனுப்புகநின்மரட்டளிகொள்விருப்பினேனே.[ய்

(14—7—19)

ஈச னருளா லெழுதுஞ் சுபநிருபம்
பேசுமுனம் வந்திலவோ பேணி—வீசுபுகழ்
கொண்டோய் மறந்தனையோ கூறுநிட் போர்கடிகை
நன்றே மதியார்க்கு நாள்.

---

## சேலம் ஜில்லா ஓமலூர் வே. செ. உயர்தரக் கலாசாலை ஆசிரியர் ஸ்ரீமான் தே. வீரராகவ ஐயங்கார் பாடியவை.

பூந்திரை மணிநீர்க் கங்கையிற் புனித மாம்புகழ்த் தாமிர பரணித்
தீம்புனல் மாந்தித் தினகரன் தேரைத் தடுப்பன போல்வளர் செந்நெல்
ஆந்தனக் குப்பை யங்கடி மூன்றில் அளப்பரும் அடுக்கலாய்த் திலங்கும்
தேம்பொழில் கமழும் திருவளர் தூற்றுக் குடியெனு மணிநகரதனில்

முந்நகர் முடித்த முக்கணி யிக்கு முறுவலூர் முகமதி பாகன்
பொந்நகர் மலர்கொண்டுவப்புறப்போற்றும்பொற்புறுசைவமும்புவ
எந்நகர் மொழியு மிதற்கிணை யில்லை யெனுமெழிற் றமிழதுந் தவழ
அந்நகர் செய்த வரும்பெருந் தவத்தா லவதரித் தாயரு ளுருவே.

பெற்றநந் தாயும் பிறந்தபொன் னாடும் பெட்புறு தாய்மொழி மூன்றும்
நற்றவ வானில் நனிசிறந் தனவா மெனமன நன்குறத் தேர்ந்து
கற்றவ னாகுங் கேசரி திலகன் களிக்குமெய்த் துணைவனாய்த் துலங்கி
உற்றநன் னாடுங் குய்வகை தேர்ந்தே ஒழிவிலா துழைத்துயிர் சிறந்தேகாய்.

பண்டைநந் தமிழர் பழுதறப்புரிந்த விரிகடல் செல்வங்க வணிகம்
எண்டிசை யோரு மேங்கிடப் புரிந்த தனிமுதற் றமிழஎம் மானே!
உண்டிடுக்கண்ணென் றுளதெனக்கண்டசிறுமையோர் கரவதனாலே
கொண்டதை யிழந்தும் கொண்டநின் வீரம் குறைபடா துயர்ந்தது வியப்பே.

ஏழைமெய் தளர்ந்தோ ரெளியவர் கூலித் தொழிலவர் மாதுயர் கடியப்
பாழதே மல்கிக் கனைகுரற் பல்லி யொலிமிகுசிறைதனி லடைந்தாய்
வாழைய னைம்மா றுளதுகொ லின்பல வகையறி தொண்டுகட் கீடா
வாழையின் குலம்போனீயுநின் குலமும் வாழ்கவ னருளினாற் பெரிதே.

ஆங்கிரச வாண்டா வணித்திங்க ளைம்பதில்
பாங்குபெறு பாரதத்தாய் புத்திரன்பேர்—ஓங்கு
சிதம்பரஞ்செய் சீரருப தாண்டுவிழாச் செப்ப
பதம்பெரிதும் பற்றாது பார்.